# புது வீட்டில் குடியேறினார் கலைஞர்!

பிப்ரவரி 26 - புது வீட்டில் கலைஞர் குடியேறி இருக்கிறார். 'மகன்' கட்டித் தந்துள்ளார். சாதாரண மகன், தன் தந்தைக்கு கட்டி எழுப்புவது வரலாறு ஆவதில்லை. தலைவராகவும் முதலமைச்சராகவும்ஆனபிறகுமாண்புமிகுமு.க.ஸ்டாலின் அவர்கள் கட்டி எழுப்பி இருப்பதுதான் பெரும் வரலாறு.



தர மறுக்கப்பட்ட நிலத்தை - சட்டப் போராட்டம் நடத்தி வென்று - அத்தோடு மக்கள் மனதையும் வென்று ஆட்சியைப் பிடித்து - தலைவர் என்ற முழுத்தகுதியும் - முதலமைச்சர் என்ற முழுமுதல் தகுதியையும் பெற்ற பிறகு இது அமைந்திருக்கிறது.

எல்லாவற்றையும் பெரிதினும் பெரிதாக கற்பனை செய்து வைத்திருப்பார் கலைஞர். 133 அடிக்கு திருவள்ளுவருக்கு சிலை வை, வள்ளுவர் கோட்டத்தில் 128 உயரத்துக்கு தேர் வை... என்பதெல்லாம் கலைஞருக்கு மட்டுமே வாய்க்கும் கற்பனைகள். அவரது கற்பனைக்கும் எட்டாதது தான் இந்த நினைவகம். 95 ஆண்டு வாழ்க்கையை ஒரு சுற்று வட்டப் பாதைக்குள் தொழில்நுட்ப உதவியோடு அடக்கிக் காட்டி விட்டார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

கோபாலபுரத்துக் கோமான், கடற்கரையில் தமிழர்களின் கலங்கரை விளக்காக ஒளி வீசத் தொடங்கி இருக்கிறார்.

**கோபாலபுரத்து வீடு - தமிழ் அவையாய் இருந்தது.**

**முரசொலி - அவரது ஞான சபையால் காட்சியளித்தது.**

**அறிவாலயம் - உடன்பிறப்பின் உணர்ச்சி அவையாய் மிளிர்ந்தது.**

**சென்னை கோட்டை - தமிழ்நாட்டின் மக்கள் அவையாய் காட்சி அளித்தது. நான்கிலும் கோலோச்சினார் கலைஞர்.**

இந்த நான்கையும் ஒன்றாய் பார்க்க நினைப்பவர்கள் கடற்கரைக்கு வாருங்கள். கலைஞர் நினைவகம் இந் நான்கின் மொத்த அவையாக இருக்கிறது.

கலைஞர் எப்போதும் தனி உயிரல்ல. அரசியல்வாதி - இலக்கியவாதி (இலக்கியத்தில் எல்லா வகையும் உண்டு) - திரையுலக கர்த்தா - பெருங்கவிஞர் - பாடலாசிரியர் - நாடக ஆசிரியர் - நாடக நடிகர் - பேச்சாளர் - பத்திரிகை ஆசிரியர் - கார்ட்டூனிஸ்ட் - என எல்லாம் கலந்த கலவை அவர். சிலை செதுக்கும் சிற்பிக்கும் உளிவழி காட்டவும் செய்வார். இசை வாசிக்கும் கலைஞருக்கும் ரிதம்பதம் சுட்டவும் செய்வார். எல்லாம் அறிந்தவரை ஒரு குடைக்குள் அடக்குதல் கடினம்.

**எட்டரை ஏக்கர் பரப்பில் எழிலார்ந்த வனப்பில் எல்லாவற்றையும் உள்ளடக்கி , பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு உருவாக்கத்தில் நினைவகம் மிளிர்கிறது. கலைஞர் மீது மாறா அன்பும், கட்டடக் கலை அறிவும் கொண்டவராக பொதுப் பணித்துறை அமைச்சர் இருப்பதால்தான் இது சாத்தியம் ஆனது.**

உள்ளே என்னவெல்லாம் இருக்கிறது தெரியுமா?

பேரறிஞர் அண்ணா சதுக்கம், அண்ணா சிலை, அண்ணா அருங்காட்சியகம், முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம், கலைஞர் சிலை, தமிழ்ச் செம்மொழியாக வழங்கப் பட்டபோது சோனியா அம்மையார் கலைஞருக்கு எழுதிய கடிதம் கல்வெட்டு வடிவில், கலைஞரின் வாழ்க்கை காட்சிகள் கொண்ட புகைப்படங்களின் குவியல், இந்தியாவின் அனைத்து முதல மைச்சர்களுக்கும் கொடியேற்றும் உரிமை பெற்றுத் தந்த முழக்கக் காட்சிகள், கோபாலபுரம் கலைஞர் அறையில் அவரோடு நின்று புகைப்படம் எடுத்துக் கொள்ளலாம், அவரோடு அமர்ந்து உரையாடலாம், அவர் எழுதிய புத்தகங்களின் தலைப்பை தொட்டால் அந்த புத்தகம் பற்றி கலைஞரின் குரலில் அறியலாம், கலைஞரின் புதிர் போட்டியில் கலந்து கொண்டு அதில் வென்றால் கலைஞர் குரலில் பாராட்டைப் பெறலாம், மகளிர் திட்டங்களின் காட்சிகள், காமிக்ஸ் புதிர் வடிவில் கலைஞரின் வரலாறு, மண்சாலைகளை தார்ச்சாலைகளை ஆக்கியதும், குடிசைகளை கோபுரங்களாக கட்டியதுமான மாற்றங்கள், நவீன தமிழ்நாட்டை அவர் எப்படி கட்டி எழுப்பினார் என்பதற்கான காட்சிகள், கலையுலகிலும் அரசியலிலும் அவர் வெற்றிக் கொடி நாட்டிய வரலாற்றைச் சொல்லும் 20 நிமிட காட்சிப் படம்... இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

**ப.திருமாவேலன்**

உங்களுக்காக ஒரு புகைவண்டி காத்திருக்கிறது. திருவாரூரில் ஏற்றி சென்னைக்கு கொண்டு வந்து இறக்கி விடும். த்ரிடி காட்சிகளில் கல்லக்குடியில் அவர் தண்டவாளத்தில் தலை வைத்து படுத்தது முதல் ஒவ்வொரு நகரங்களிலும் அவர் உருவாக்கிய கட்டமைப்புகள் வரை பார்த்தபடியே வலம் வரலாம். தட தட அதிர்வுகளோடு முழுக்கலைஞரையும் அறியலாம்.

**குறைந்தது இரண்டு மணி நேரம் தேவைப்படும் 'மு.க' என்ற இரண்டெழுத்தை அறிய!**

**நினைவகம் திறக்கப்படுவது போல இல்லை, 'உணர்வகம்' திறக்கப்பட்டதைப் போலவே இருக்கிறது.**

**'இந்தியாவின் இரண்டாவது பெரிய கடற்கரையில் அமைந்துள்ள முதல் அதிசயம் இது'** என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருப்பது முழு உண்மை!

**'ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இங்கே உறங்குகிறான் என்று எனது கல்லறையில் எழுதவேண்டும் என்பதற்காகவே தவம் இருக்கிறேன்' - என்றார் கலைஞர்.**

**ஓய்வெடுக்காமல் உழைத்த தலைவர், இப்போதும் உறங்கவில்லை. உழைத்துக் கொண்டுதான் இருக்கிறார். உழைப்பு என்பது செயல்படுவது மட்டுமா? இல்லை, செயல்பட வைப்பதும் உழைப்புத்தான்!**

**தன்னில் இருந்து உருவான தலைவனை உழைக்க வைத்து உழைத்துக் கொண்டுதான் இருக்கிறார் கலைஞர்!**

'ஒருவன் எத்தனை ஆண்டு காலம் வாழ்ந்தான் என்பதை அவனது மரணத்துக்குப் பிறகு கணக்கிட வேண்டும்' என்றவரும் அவர்தான். 2018 ஆகஸ்ட் 7 க்குப் பிறகு கலைஞரின் பிறப்பு கணக்கிடப்படுகிறது. ஐந்து வயதுப் பிள்ளை. திருவாரூரின் முல்லை. இன்று தமிழ்நாட்டின் எல்லையாக தலைநகரில் எழுந்து நிற்கிறார் கலைஞர்.

அரசியலில் அவர் சூடான உதயசூரியன்.

கலையுலகில் குளிர்ச்சிமிகு சந்திரன்.

சூரியனும் சந்திரனும் கடலோரத்தில் ஒருசேரக் காணக் கிடைத்த கருவூலமே கலைஞர் நினைவகம்.

**அது இனி கலைஞர் திடல்! கலைஞர் கடல்!**

---

வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் தலைமையில் - எம்.கிருஷ்ணமூர்த்தி - இரா.துரைராஜ் முன்னிலையில் -

## 140வது வட்டத்தில் முதல்வர் பிறந்த நாள்: 5071 பேருக்கு நல உதவிகள் - பொதுக்கூட்டம் !

### அமைச்சர்கள் எ.வ.வேலு - மா.சுப்பிரமணியன் - அன்பில் மகேஷ்பொய்யாமொழி சிறப்புரை!

### தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, - ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, - துணைமேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை, பிப். 28 -

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி 140 வது வட்ட திமுக சார்பில் 5071 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக் கூட்டம் சைதாப்பேட்டை குமரன் காலணி அரங்கநாதன் சுரங்கப்பாதை அருகில் 29.02.2024 வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் பொதுக்குழு உறுப்பினர் 140வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் தலைமையிலும், பகுதிச் செயலாளர்கள் - மண்டல குழுத் தலைவர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், சைதை சம்பத், மின்னல் கந்தப்பன் ஆகியோர் முன்னிலையிலும் த.சம்பத், கவிதா கௌதமன், ந.தமிழரசு, கு.புகழ்வேந்தன், வழக்கறிஞர் த.பாபு, எம்.சுரேஷ்குமார், ஜி.பாபு, ஆர்.ரவி, லால்மனோகரன், எஸ்.மணிவண்ணன், எம்.வளர்மதி, அ.வீரமணி, ஆ.கவிராஜ், எம்.அய்யாவு, ஆர்.பன்னீர், இ.பாண்டுரங்கன், கே.ஞானம் ஆகியோர் வரவேற்பில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு, பொதுப் பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு, மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் நல உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர். தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., துணைமேயர் மு.மகேஷ்குமார் ஆகியோரும் பேசுகின்றனர்.

இக்கூட்டத்திற்கு சட்ட மன்ற உறுப்பினர்கள், எஸ்.அரவிந்தரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, கழக மாநில நிர்வாகிகள் காசிமுத்துமாணிக்கம், வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி, க.தனசேகரன் எம்.சி, பாலவாக்கம் க.சோமு, மாவட்ட கழக நிர்வாகிகள், எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி, பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகிபாண்டியன், எஸ்.பாஸ்கரன் எம்.சி, பகுதி கழக செயலாளர்கள் எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி, வி.இ.மதியழகன் எம்.சி, நொளம்பூர் வே.ராஜன் எம்.சி, கே.கண்ணன் எம்.சி, மு.இராசா எம்.சி, சு.சேகர், துரைகபிலன், அ.ம.துரைவீரமணி, ஜி.வெங்கடேசன், ரத்னாலோகேஷ்வரன் எம்.சி, தா.மோகன்குமார் எம்.சி,

பொதுக்குழு உறுப்பினர்கள் ப.ரவி, எம்.கே.ஏழுமலை, உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், அ.அரிகிருஷ்ணன், ஆர்.பாலசுந்தரம், வீ.கனிமொழி, பி.எஸ்.முருகேசன், பி.ஜே.பாஸ்கர், த.பஷிர், வ.செல்வகுமார், சைதை மேற்குகிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் களக்காடிஎல்லப்பன், வி.பி.ஜானகிராமன், ஆர்.ரமேஷ், இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, ஆர்.அருணகிரி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், ஆர்.கிருஷ்ணகுமார், எம்.வினாயகமூர்த்தி, கோட்டூர்எஸ்.பிரகாஷ், ச.சங்கர்கணேஷ், ஜெ.இ.பாண்டியன், க.வி.தியாகராஜன், செ. ரவி, அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், சைதைசாதிக், வே.ஆனந்தம் எம்.சி, நா. மணிகண்டன், அஞ்சல்ராமன், எம்.எஸ்.அரிபாபு, ஆர்.சசிகுமார். ஜி.வரதன், சங்கீதாபாரதிராஜன், ப.அருண்குமார், சி.சுரேஷ், சி.பரிமேலழகன், கழகத.ரமேஷ், வ.செல்வகுமார், வி.ராஜேஷ், மஞ்சுளாதேவி, கனிமொழி, நிஷாசையத், வட்டக் கழக செயலாளர்கள், சை.மு.சேகர், அட்கோகமலநாதன், எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, நா.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கி யராஜ், சைதை மு.இராஜா, க.மணி, கோ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, எஸ்.ஆர்.செந்தில்,

மாவட்ட பிரதிநிதிகள் டி.என்.சிவமணி, கிண்டி செல்வம், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பொன்ஜெய்சிங், பால்கார்ரவி, டி.வி.நரசிம்மன், ச.சேகர், என்.நந்தகோபால், எஸ்.ராதாகிருஷ்ணன், எஸ்.ஜே.சலாம், எஸ்.ரவி, க.உமாபதி, ஜி.செல்வராஜ், வே.ரமேஷ்குமார், ஜி.யோவான், வே.முருகன், இரா.சுதாபிரியன், ஏ.மஜித், எஸ்.கணேசன், ந.பாபு, மு.மகேஷ் லாரன்ஸ் உள்ளிட்ட மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், 140, 140(அ) வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர். இக்கூட்டத்தின் ஆரம்பதுீதுல் மாலை 5 மணியளவில் இறையன்பன் குத்தூஸ் கழக இன்னிசை நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

வட்ட அவைத் தலைவர் பிரஸ்.க. மணி நன்றி கூற உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஏற்பாட்டில் துறைமுகம் தொகுதிக்கு உட்பட்ட 25 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவியை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மாநகர மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் பா.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றி அழகன். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ப.ரங்கநாதன். கே.எஸ்.ரவிச்சந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

தாம்பரம் மேற்குப் பகுதியில்

## வட்டந்தோறும் செயல்வீரர்கள் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் எஸ்.இந்திரன் வேண்டுகோள்!

தாம்பரம், பிப். 28 -

தாம்பரம் மேற்கு பகுதிக் குட்பட்ட வட்டங்கள் தோறும் செயல் வீரர்கள் கூட்டம் குறித்து பகுதி கழகச் செயலாளர் எஸ்.இந்திரன் வேண்டுகோள் வருமாறு:

28 - 2 - 2024 செவ்வாய்க்கிழமை & 29 - 2 - 2024 புதன்கிழமை, தாம்பரம் மேற்கு பகுதியில் அடங்கிய வட்டங்கள் வாரியாக செயல் வீரர்கள் கூட்டம் கீழ்கண்ட நேரங்களில் நடைபெற உள்ளது

62 வது வட்டம் 28- 02. 2024 புதன்கிழமை மாலை 5 மணி அளவில் 63 வது வட்டம் மாலை 5.30 மணி அளவில் 64 வது வட்டம் மாலை 6.00 மணியளவில் 46 வது வட்டம் 29- 02-2024 வியாழக்கிழமை மாலை 3 மணி அளவில் 47 வது வட்டம் மாலை 3.45 மணி அளவில் 48 வது வட்டம் மாலை 4.30 மணி அளவில் 45 வது வட்டம் மாலை 5.15 மணி இக்கூட்டத்தில் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள தாம்பரம் சட்டமன்ற தொகுதி தேர்தல் ஒருங்கிணைப்பாளர் என்.மருது கணேஷ், தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

மேலும் நிகழ்ச்சி நடைபெறும் வட்டங்களுக்கு உட்ப்பட்ட வட்ட கழக நிர்வாகிகள் பி.எல்.எ.2 பாக நிலை முகவர்கள், பி.எல்.சி. வட்டத்திற்குட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிரணி மற்றும் கழக முன்னோடிகள் சிறப்பு அழைப்பாளர்கள் பெருந்திரளாக பங்கு பெறும் வகையில் இந்த நிகழ்ச்சயினை வட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தை ஒருங்கிணைத்து நடத்தி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எஸ்.இந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.





மக்களவைத் தேர்தலையொட்டி, கழகத்தின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற வேண்டிய முக்கிய அம்சங்கள் குறித்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு நேரில் சென்று, பொதுமக்களை சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமையிலான தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் கேட்டறிந்து வரும் நிலையில், நேற்று (27.02.2024 செவ்வாய்க்கிழமை), சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கருத்துகேட்பு கூட்டத்தில் மருந்து வணிகர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், தொழிற்துறை அமைப்புகள், உற்பத்தியாளர் சங்கங்கள், அரசு ஊழியர், ஆசிரியர் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து அவர்களின் பரிந்துரைகள் திமுக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவின் தலைவரும், திமுக துணைப் பொதுச்செயலாளரும், திமுக நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கேட்டறிந்தார். உடன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி. எழிலரசன், டாக்டர் எழிலன் நாகநாதன், சென்னை மாநகராட்சி மேயர் திருமிகு.பிரியாராஜன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.